குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம்

திண்டுக்கல்

**STC.No: 34/2023 , நாள் – 20.07.2026.**

எதிரி தரப்பு சாட்சி 1 இன் சாட்சியம்

<u>முதல் விசாரணை</u>

பெயர் – கோகிலாதேவி

கணவர் பெயர் – சரவணக்குமார்

முகவரி – பாலகிருஷ்ணாபுரம், திண்டுக்கல்

வயது – 37

தொழில் – டீ கடை

**<u>புகார்தாரர் இறப்பு</u>**

**சத்தியப்பிரமாணத்தின் மூலம் முதல் விசாரணை**

**எதிரி தரப்பு சாட்சியம்**

புகார்தாரர் பசுங்கிளி என்பவரை எனக்கு தெரியாது. கடந்த 2022ம் வருடம் சேகர் என்பவரிடம் வாங்கிய கடனுக்கு ஆதரவாக இந்த வழக்கு காசோலை, கடனுறுதி சீட்டு 2 ஆகியவற்றை கொடுத்தேன். காசோலையில் கையொப்பம் எதுவும் போடவில்லை வெற்றுக்காசோலையாக கொடுத்தேன். கடனுறுதி சீட்டுகளில் கையொப்பம் மட்டும் போட்டு நிரப்பாமல் கொடுத்திருந்தேன். கடனுறுதி சீட்டுகளை வைத்து சேகர் வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் கொடுத்த காசோலையை புகார்தாரர் மூலம் தவறாக பயன்படுத்தி வழக்கு தாக்கல் செய்துள்ளார். இது சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். **(02.08.2022 தேதியிட்ட எதிரி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மற்றும் அஞ்சலக ரசீதுகள் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** மேற்படி

புகார் கொடுத்த பிறகு தான் இவ்வழக்கின் புகார்தாரர் எனது கணவரிடம் போன் மூலமாக தொடர்பு கொண்டார். நான் உங்களது சமுதாயத்தை சேர்ந்தவர் எனவும், பஞ்சாயத்து பேசி முடித்து தருவதாகவும் சொல்லி மிரட்டியுள்ளார். அந்த விபரங்கள் எனது கணவருக்கு தான் தெரியும். நான் புகார்தாரரிடம் கடன் எதுவும் வாங்கவில்லை அதற்கு ஆதரவாக காசோலை எதுவும் கொடுக்கவில்லை புகார்தாரர் என் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை–இல்லை**

வாய்ப்பு வழங்கப்பட்டு குறுக்கு விசாரணை இல்லை.

S. [signature]

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

[signature] 20/7/2024

Judicial Magistrate No.I
Dindigul.